1986 நவம்பர் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்கள் சொல்லிய யோசனை மிக சீரிய யோசனை. நல்ல யோசனை. இதன் மூலம் வருவாய் அரசுக்கு அல்ல, பெரும் தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போகிறது. இப்போது ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் நிதி வசதி இல்லை என்று தவித்துக் கொண்டிருக்கிற நிலையில் இப்படி வருமானத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பு வசதிகள் கிடைப்பது நல்லது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொல்லியதைப் போல இப்போது புளிய மரங்களுக்கு 6 ரூபாய் தான் விதிக்கிறோம். மாமரத்திற்கும் 6 ரூபாய். பலா மரத்திற்கு 6 ரூ. தென்னை மரத்திற்கு 8 ரூபாய் விதிக்கிறோம். அவர்கள் சொல்லியது மாதிரி உற்பத்தி அதிகமாகி இருக்கிறது. இரண்டு தேங்காய்களின் விலையே 8 ரூபாய்க்கு வருகிறது. இதையெல்லாம் பார்க்கிறபோது, இந்த வரிகளைக் கூடுதலாக ஆக்குவது, அரசுக்கு கூட அல்ல, நிதித் துறைக்கு, நிதியமைச்சருக்கு கூட அல்ல, ஊராட்சிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக பலன், வருவாய் கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கூறிய யோசனையை மனத்திலே வைத்துக் கொண்டு இதற்கு என்ன செய்யலாம் என்பதை அரசு யோசிக்கும்.

நத்தம் தொகுதி சானார்பட்டி ஒன்றியத்திலுள்ள எமக்கலாபுரம் கிராம விவசாயிகள் கட்டும் தண்டத்தீர்வை.

23 (*வினா எண் 6922) திரு. மெ. ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம், எமக்கலாபுரம் கிராமத்தின் அயன் சர்வே நெ. 594-ல் ஏக்கர் 104-ம் சென்ட் 99-ம் கொண்ட அரசு தரிசு நிலத்தில் நிலமற்ற ஏழை விவசாய மக்கள் தலா 2 ஏக்கர் வீதம் விவசாயம் செய்து, தண்டத்தீர்வையைப் பல வருடங்களாகக் கட்டி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அவர்களுக்கு பட்டா வழங்கப்பெறும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் வட்டம், எமக்கலாபுரம் கிராமம் புல எண் 594 இல் உள்ள 104.99 ஏக்கர் நிலங்கள் தலா 2 ஏக்கர் வீதம் விவசாயிகளின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்பில் இல்லை. அந்நிலங்கள் விவசாயத்திற்கு லாயக்கற்ற நிலங்களாக இருப்பதால் ஒப்படை செய்வதில் யாருக்கும் பயனிருக்காது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் 2 ஏக்கர் 3 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே புஞ்சை நிலமும் உள்ளது; புஞ்சை விவசாயம் செய்து வருகிறார்கள். ஆகவே புளிய மரங்களுடைய கன்றுகளை நட்டு, அவற்றை 2—சி பட்டாவாகக் கொடுப்பதற்கு, கனம் அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புலத்திலே ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட விவரங்களைப் பற்றி, அவர்கள் சொல்லுகிறபடி, 1391 ஆம் பசலியில் திரு. பழனிச்சாமி அம்பலம் என்பவர் 3 சென்ட் நிலத்தில் மா, புளிய மரங்களை நட்டு ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அந்தப் பசலியில் அதைத் தவிர வேறு ஆக்கிரமிப்புகள் இல்லை. 1392 ஆம் பசலியில் திரு. பழனிச்சாமி அம்பலம் என்பவருடைய மரம் நடப்பட்ட பகுதி 3 சென்டும் முள் செடிகள் வெட்டி காலி செய்யப்பட்டு, முள் வேலி போடப்பட்ட 4.14 ஏக்கர் நிலத்திற்கும் பி.மெமோ வழங்கப் பட்டிருக்கிறது. அந்தப் பசலியிலும் அதைத் தவிர வேறு ஆக்கிரமிப்பு இல்லை.

(முற்பகல் 9–20)

1393 ஆம் பசலியில் திரு. பழனிச்சாமி அம்பலம் என்பவரால் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புடன் 8 நபர்கள் தலா 2 ஏக்கர் வீதம் சோளம், தினை போன்ற புஞ்சைப் பயிர்களை விதைத்து ஆக்கிரமிப்பு செய்து உள்ளனர். ஆனால் அதில் பலன் இல்லை என்று தெரிகிறது. அதனால் அடுத்த பசலியில் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. 1394 ஆம் பசலியில் திரு. பழனிச்சாமி அம்பலம் என்பவருடைய மரங்கள் நடப் பட்ட பகுதியில், அதாவது 3 சென்ட் நிலத்தில் மட்டும் ஆக்கிர மிப்பு இருந்தது. அந்தப் பசலியில் வனத்துறையினர், அந்த இடத்தில் சீத்தை கன்றுகள் நட்டனர். எனவே ஆக்கிரமிப்புகள் இல்லை. 1395 ஆம் பசலியில் திரு. பழனிச்சாமி அம்பலம் என்பவர் மரங்கள் நட்டு ஆக்கிரமிப்பு செய்த 3 சென்ட் நிலம் மட்டும் ஆக்கிரமிப்பாக உள்ளது. மேலும் இதைப் பார்வையிட்டதில் இவர் ஏற்கனவே இருந்த முட்களை அகற்றி முள்வேலி அமைத்திருக்கிறார். மறுபடியும் முளைத்த முட்புதர்களை அகற்றி முள்வேலி அமைத்து உள்ளார். இது சமீபத்தில் செய்த சீர்திருத்தமாகும். இதைப் போல 20 நபர்கள் இந்த நிலத்தில் புதர்களை ஆங்காங்கு அகற்றி அவர்கள் குறிப்பிட்ட அளவிற்கு வேலி போல் முட்களை அமைத்துள்ளார்கள். ஆகவே இந்த நிலம் மலைச்சரிவான கல்லாகவும், சரளையாகவும் இருப்பதால் விவசாயத்திற்குப் பயன்படாது என்றும், வனத்துறையால் சமூக காடுகள் அமைக் கப் பயன்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால்

1986 நவம்பர் 17]

திரு. பழனிச்சாமி அம்பலம் 3 சென்ட் நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து மரங்கள் நட்ட இடத்தில் புளி 4, மா 1, முருங்கை 3, உலவு 2, பனை சிறியது 13 உள்ளன. இதிலே புளி, மா மரங்கள் தற்போது பலனுக்கு வரத் தொடங்கியுள்ளன, இது வரையில் அடமானம் கோரி மனு எதுவும் செய்யப்படவில்லை. இந்த மரங்களுக்கு 2-சி பட்டா மனுவைப் பெற்று மரப்பட்டா வழங்க திண்டுக்கல் வட்டாட்சியருக்கு அறிவுரைகள் தரப்பட்டிருகின்றன. 2-சி பட்டா வேண்டுமென்றால் தரலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்கிறபடி இவைகள் விவசாயத்திற்கு, நஞ்சை விவசாயத்திற்கும், மற்ற விவசாயத்திற்கும் பயன்படவில்லையென்றும், 2-சி பட்டா வழங்கலாம் என்றால் வழங்கலாம் என்றும் வட்டாட்சியருக்கு அறிவுரை தரப்பட்டிருக்கிறது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிற இடங்களை காட்டு இலாக்கா மூலமாக அகற்ற வேண்டுமென்ற ஒரு நோக்கத்தோடு அவர்கள் தங்கள் மரங்களை நடுகிறார்கள். ஏழை விவசாயிகள் 2 ஏக்கர், 3 ஏக்கர் என்ற அளவில் தான் விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் சோளம், கம்பு, கேழ்வரகு போன்றவைகளை விவசாயம் செய்கிறார்கள். அந்த விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய ஏழை விவசாயிகள் என்ற அடிப்படையில் கனம் அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் விவசாயம் செய்கிற ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகளுக்கு 2 அல்லது 3 ஏக்கர் வீதம் பட்டா செய்து வழங்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னேன். 20 நபர்கள் முயன்றார்கள். ஒரு ஆண்டு சோளம் மற்றவைகள் போட்டார்கள் பலன் இல்லையென்று பின்னால் விட்டு விட்டார்கள். அடுத்த பசலியிலிருந்து செய்யவில்லை. ஒருவர் மட்டும் தான் பழனிச்சாமி அம்பலம் என்பவர் பயிர் செய்திருக்கிறார். மரங்களை நட்டிருக்கிறார். அதை அவர் முயன்று செய்திருக்கிறார். அதற்கு 2-சி பட்டா வழங்கலாமென்று வட்டாட்சியருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற பல இடங்களில் அதை காடுகளாக வளர்ப்பதற்கு வனத்துறையினர் முயன்று கொண்டு வருகிறார்கள். இதிலே ஆக்கிரமிப்பு எதுவும் செய்யப்படவில்லை.

சிவகாசி நகர் மத்திய கூட்டுறவு வங்கிக் கட்டிடம்

24-(* வினா எண். 7777) திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி நகரில் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை வங்கி வாடகைக் கட்டிடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?